# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-45000032 மின் அஞ்சல் : ubeutn@gmail.com

சுற்றறிக்கை எண்:111:2023 நாள்: 06.04.2023

அன்பார்ந்த தோழர்களே,

## இடமாற்றல் கொள்கை - மாற்றங்கள்


அகில இந்திய அமைப்புக்கும், வங்கி நிர்வாகத்திற்கும் இடையே 1988ஆம் ஆண்டு இடமாற்றல் கொள்கை கையெழுத்திடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2020ஆம் ஆண்டு வங்கிகள் இணைப்பிற்குபின், இடமாற்றல் கொள்கையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டது.

கடந்த 18.03.2023 அன்று இடமாற்றல் கொள்கையை அனைத்து மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக செயல்படுத்துவதற்காக ஏதுவாக சில மாற்றங்களை ஏற்படுத்தவும், விளக்கம் அளிக்கவும் ஒரு ஒப்பந்தம் வங்கி நிர்வாகத்திற்கும், அகில இந்திய அமைப்பிற்குமிடையே கையெழுத்திடப்பட்டது. அதன் முக்கிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

- ஒரு மாநிலத்திலிருந்து மற்றொறு மாநிலத்திற்கு இடமாற்றல் பெறும்போது அவர்கள் பெற்றுவந்த சிறப்பு உதவியாளர், தலைமைக் காசாளர், டப்தரி போன்ற சிறப்புப் படிகள் நீக்கப்பட்டு சாதாரண எழுத்தராகவோ/துணைநிலை ஊழியராகவோ இடமாற்றல் பெறுவார்கள்.
- ஒரே மாநிலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கள பொதுமேலாளர் அலுவலகங்கள் (Field General Manager's office) இயங்கினால், ஒரு களபொதுமேலாளர் அலுவலக எல்லையிலிருந்து மற்றொறு களபொதுமேலாளர் அலுவலக எல்லைக்கு இடமாற்றல் பெறும்போது அவர்கள் பெற்றுவந்த சிறப்பு உதவியாளர், தலைமைக் காசாளர், டப்தரி போன்ற சிறப்புப் படிகள் நீக்கப்பட்டு சாதாரண எழுத்தராகவோ/துணைநிலை ஊழியராகவோ இடமாற்றல் பெறுவார்கள்.
- ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்கள் (தாய், தந்தை, துணைவர், மகன், மகள், மருமகன், மருமகள், சகோதரர், சகோதரி, துணைவியின் சகோதரர்) ஒரே கிளையில் பணியாற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். குடும்ப உறுப்பினர்கள் பணியாற்றுவதை ஊழியர்கள் வங்கிக்கு தெரிவிக்கவேண்டும்.
- இடமாற்றலுக்கு விண்ணப்பித்துள்ள ஊழியரின் குடும்ப உறுப்பினர்கள், அவர் இடமாற்றல் பெறவுள்ள கிளையில் பணியாற்றினால், அவருக்கு இடமாற்றல் வழங்கப்படமாட்டாது. அவருக்கு அடுத்துள்ள நபருக்கு இடமாற்றல் வழங்கப்படும்.

- இரு ஊழியர்கள் தங்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் கிளைகளை மாற்றிக்கொள்ள விரும்பினால், அந்தக்கிளைகளுக்கு அவர்கள் இடமாற்றல் புத்தகத்தில் தங்கள் ஊரிலிருந்து முதல் நபராக இருந்தால், அவர்களுக்கு இடமாற்றல் வழங்கப்படும். அவர்கள் ஏற்கனவே அந்தக் கிளையில் பணியாற்றியிருந்தால், இரண்டு ஆண்டுகளுக்குப்பின் இடமாற்றல் பெறலாம்.

தோழமை வாழ்த்துகளுடன்,



**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**